**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

பேரூராட்சி சாலைகள் - கரூர் மாவட்டம் - புன்செய்ப் புகழூர் மற்றும் காகித ஆலை பேரூராட்சிகளுக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறைக்கு ஒப்படை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1)) துறை**

அரசாணை (2டி) எண் 115 நாள் 17.11.99.

படிக்கப்பட்டது

1)பேரூராட்சிகள் இயக்குநர் கடித எண், 7658/98/டி3 நாள் 28.9.98

2)நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறையின் தலைமைப்பொறியாளான் கடித எண் 21619/சாலை 2/99 நாள் 23.7.99

*****

ஆணை

கரூர் மாவட்டம் புன்செய்ப் புகழூர் பேரூராட்சிக்கு உட்பட்ட தேசிய நெடுஞ்சாலை எண் 7ல் கி.மீ. 282/0ல் வேலாயுதம் பாளையம் கரூர் சாலையிலிருந்து பிரித்து புகழூர் மேல்நிலைப்பள்ளி அருகிலிருந்து தமிழ்நாடு காகித ஆலை பக்கஸ்கேட் மூலிமங்கலம் வரை செல்லும் கி.மீ. 0/0 முதல் 2/4 கி.மீ. வரை உள்ள சாலையை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறைக்கு பராமரிப்பு செய்ய ஒப்படைக்க புன்செய்ப்புகழூர் பேரூராட்சி தீர்மானம் எண் 106 நாள் 31.8.98 மூலம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும், கரூர் மாவட்டம், தமிழ்நாடு காகித ஆலை சிறப்பு நிலை பேரூராட்சியின் பராமாப்பில் உள்ள தேசிய நெடுஞ்சாலை எண்.7ல் இருக்கும் அரசு மேல்நிலைப்பள்ளி மேடு வரையுள்ள சாலை - பேரூராட்சி எல்லை வரை (பக்காஸ்கேட் சாலை வரை) 1.6 கி.மீ. நீளமுள்ள சாலை மற்றும் புன்னம்புகழூர் ரோட்டில் புகழூர் ரயில்வே நிலையம் முதல் மூலிமங்கலம் ரயில்வே பாலம் வரை 2 கி.மீ. நீளமுள்ள சாலை ஆகியவற்றை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறைக்கு ஒப்படைக்க தமிழ்நாடு காகித ஆலை சிறப்பு நிலை பேரூராட்சி தீர்மானம் எண் 7 நாள் 29.1.98ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் இதனை பரிசீலித்த பொதுப்பணிததுறையின் தலைமைப் பொறியாளர் (பொது) காகித ஆலைக்குச்

செல்லும் சாலையில் கனரக வாகனங்கள் மிகுதியாகச் செல்வதாகவும் எனவே இச்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு இணையான மேம்படுத்தப்பட வேண்டும் எனவும், இதற்கான செலவு ரூ.98.00 இலட்சங்கள் ஆகும் எனவும் குறிப்பிட்டுள்ளார் எனவும் தமிழ்நாடு காகித ஆலையில் நிதிப்பற்றாக்குறை காரணத்தால், இச்சாலைகளை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையிடம் அகலப்படுத்தவும், பலப்படுத்தவும், பராமரிக்கவும் ஒப்படைக்கலாம் என்று மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகள் இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறை தலைமைப் பொறியாளரும் மேற்படி சாலைகளை பராமரிப்பு செய்ய நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையிடம் மாற்றுவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார்.

2.பேரூராட்சிகளின் இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு, கீழ்க்கண்ட 5.8 கி.மீ. நீளமுள்ள பேரூராட்சி சாலைகளை அகலப்படுத்தவும், பலப்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையிடம் ஒப்படைப்புச் செய்ய இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது,

(1)கரூர் மாவட்டம், புன்செய்ப்புகழூர் பேரூராட்சிக்கு உட்பட்ட தேசிய நெடுஞ்சாலை எண் 7ல் கி.மீ. 282/0ம் வேலாயுதம்பாளையம், கரூர் சாலையிலிருந்து பிரித்து புகழூர் ஹைஸ்கூல் அருகிலிருந்து தமிழ்நாடு காகித ஆலை பக்கஸ்கேட் மூலிமங்கலம் வரை செல்லும் 0/0 முதல் 2/4 கி மீ வரையுள்ள சாலை - 2.4கிமீ நீளமுள்ள சாலை

(2)தமிழ்நாடு காகித ஆலை சிறப்பு நிலை பேரூராட்சி பராமரிப்பில் தேசிய நெடுஞ்சாலை எண் 7ல் உள்ள மூலிமங்கலம் ரயில்வே பாலம் முதல் தேசிய நெடுஞ்சாலை எண் 7ல் இருக்கும் அரசு மேல்நிலைப்பள்ளி மேடு வரையுள்ள சாலை பேரூராட்சி எல்லை வரை (பக்கஸ்கேட் சாலை வரை) 1.4 கிமீ நீளமுள்ள சாலை மற்றும்

(3)புன்செய்ப்புகழூர் ரோட்டில் புகழூர் ரயில்வே நிலையம் முதல் மூலிமங்கலம் ரயில்வே பாலம் வரை 2.00 கிமீ நீளமுள்ள சாலை

3.இவ்வாணை நெடுஞ்சாலைத் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 15062/எச்பி 2/99 - 1 நாள் 5.10.99 இசைவுடன் வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தலைமைப்பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை 5
பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை 108
பேரூராட்சிகள் உதவி இயக்குநர், கரூர் மாவட்டம்
செயல் அலுவலர், புன்செய்ப்புகழூர் பேரூராட்சி, வேலாயுதம்பாளையம், கரூர் மாவட்டம் 639 117
செயல் அலுவலர், தமிழ்நாடு காகித ஆலை பேரூராட்சி, காகிதப்புரம் 639 136 கரூர் மாவட்டம்
நெடுஞ்சாலைத்துறை, தலைமைச் செயலகம், சென்னை9
பொது மேலாளர், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித லிமிடெட், காகிதபுரம் 639 136 கரூர் மாவட்டம்
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித லிமிடெட் 35, அண்ணாசாலை, கிண்டி சென்னை32

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்